பூண்டி புதுமை அமல அரசி அன்னை

(செண்மராக்கினிமாதா)

# திருத்தல வரலாறு



(ஞான அதிகாரிகள் ஒப்புதல் பெற்றது)

# பொருளடக்கம்


1. முன்னுரை ... 3
2. பூண்டித் திருத்தல வரலாறு ... 4
3. பக்தர்கள் அடைந்துள்ள பேறுகள் ... [illegible]
4. செபங்கள் ... 35
5. பூண்டி மாதா பாடல் ... 4

# முன்னுரை

★

நல்லது எல்லாமே இறைவனிடமிருந்துதான் வருகிறது. அவர் அறியாதது எதுவுமே மனிதனுக்கு நேராது.

நமக்குத் தேவையான வரங்களையும் உதவிகளையும் நாடி, இறைவனை அண்டி வேண்டிக்கொள்ளுங்கால் நமக்கு அவை கிடைக்குமோ, கிடைக்காமற் போகலாமோ என்றெண்ணி ஏங்குவதைக் கைவிட்டு, அவை நமக்குக் கண்டிப்பாகக் கிடைக்கும் என்னும் உறுதியான நம்பிக்கையோடிருத்தல்வேண்டும். ஏனெனில், நல்லது, நன்மை என்பதெல்லாம், இயல்பாகவே, இறைவனிடமிருந்துதான் வருவது; ஆதலால், நம் வேண்டுதல் பலன் தராமற் போவதற்குக் காரணமேயில்லை.

இறைவனே நம்மைப் படைத்தவர்; நம்மை மீட்டவர்; நம்மைக் காப்பவர். ஆதலால், மனுக்குலத்திற்குத் தேவையான ஆசிகளையும், அருள்வரங்களையும் நமக்கு வாரி வழங்கக் காத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் ஒன்று. இந்த வரங்களெல்லாம் நம்மை வந்தடைவதற்கு ஒரு வழி வாய்க்காலாக, தம் அன்பு அன்னையையே குறித்துள்ளார். அவளே, நம் மத்தியஸ்தி; நமக்காக அவரிடம் பேசுபவள். அவள் வழியாகவே, நாம் இறைவனை அணுகுதல் வேண்டும்; அணுகவும் முடியும்.

எங்கும் நிறைந்துள்ள இறைவன், இவ்வுலகில் ஒரு சில இடங்களைத் தம் அன்னையின் மூலம் அருள்மழை திருத்தலங்களாகத் தேர்ந்தெடுத்துள்ளார். இப்பூண்டிப் பதியுமாகும்.

எங்குமிருந்து, எமக்கு வந்துள்ள பல்லாயிரக் கணக்கான நற்சான்றிதழ்களே, பூண்டிப் புதுமை அமல அரசி அன்னையின் வழியாய் எண்ணிறந்த மக்கள் அடைந்துள்ள புதுமை வரங்களுக்குச் சான்று பகரும்.

இதோ இச்சிறு நூலைப் படியுங்கள்: உண்மையை நன்கு உணர்வீர்கள்!

# பூண்டித் திருத்தல வரலாறு

## பூண்டிக் கிராமம்

அலமேலுபுரம் பூண்டி என்பதே இச்சிற்றூரின் முழுப் பெயர்; இதனைச் சுருக்கமாகப் பூண்டி என்றழைப்பது வழக்கமாகிவிட்டது. தமிழகத்திலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருக்காட்டுப்பள்ளிக்கு 2 மைல் வடக்கிலுள்ளது. காவிரியாற்றின் வடிகாற் பகுதியிலுள்ள வரலாற்றுச் சிறப்புப்பெற்ற கல்லணைக்குக் கிழக்கே 8 மைல் தொலைவில் அமைந்துள்ளது. ஊருக்குத் தெற்கே 4 பர்லாங் தொலைவில் காவிரியாறும், வடக்கே 4 பர்லாங் தொலைவில் கொள்ளிடமும் ஓடுகின்றன. தென் இந்திய இரயில் மார்க்கத்தில், திருச்சிராப்பள்ளி – தஞ்சாவூருக் கிடையேயுள்ள பூதலூர் இரயில் நிலையம்தான் இவ்வூருக்கு மிக அண்மையிலுள்ளது. அங்கிருந்து திருக்காட்டுப் பள்ளிக்கு பஸ் வசதியுமுண்டு. திருக்காட்டுப்பள்ளி யிலிருந்து பூண்டிக்கு வண்டி வாடகை ரூ. 2 தான். நடை பாதை வழியே சென்றால், 1 மைலுக்கு மேலிராது. கல்லணையிலிருந்து திருவையாறு செல்லும் பஸ்ஸில் ஏறிச் சென்றால், 10-வது மைலில் பூண்டி ஆலயத்தின் வெண்ணிறக் கோபுரம் நம்மை அங்கு வரவேற்கக் காணலாம்.

## பூண்டி ஆலயம்

பூண்டியில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் அன்போடு இணைந்து வாழ்ந்து வருகின்றனர். 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1714 – 1721) இத்தாலி நாட்டிலிருந்து தமிழகம் போந்த வீரமாமுனிவர் என்னும் இயேசுசபைக் குருவானவர், இங்கு அமல உற்பவ அரசி (சென்மராக்கினி) பெயரால் ஓர் ஆலயத்தை அமைத்தார். அந்த ஆலயம் சிலுவை வடிவில் அமைந்தது. மூன்று புறமும் திறந்த வளைவுகளும், பீடத்திற்குமேலே உயரமான ஒரு விதானமும்

கொண்டது. இவ்வகையான ஆலயங்களை வீரமாமுனிவரே, திருக்காவலூர் என்னும் ஏலாக்குறிச்சியிலும், வடுகர் பேட்டையிலும், மாதாவின் பெயரால் அமைத்தார் என்றும் தெரியவருகிறது.

## பூண்டி புதுமை மாதா சுரூபம்

1858-ல், அதாவது, இந்த ஆலயம் அமைத்த 150 ஆண்டுகளுக்குப் பின்னர், பிரான்சு நாட்டிலுள்ள லூர்து நகரில் நம் பரிசுத்த அன்னை புனித பெர்நதெத்துக்குக் காட்சிதந்து "நாமே அமலோற்பவம்" என அறிவித் தருளினாள். அதே ஆண்டில், பாரீசிலுள்ள அந்நிய வேத போதக சபைக் குருக்களால் லூர்து மாதா சுரூபங்கள் மூன்று, இந்தியாவுக்குக் கொண்டுவரப்பெற்றன. அவற்றுள் ஒன்று, பூண்டி ஆலயத்தில் அமைக்கப் பெற்றது. அந்த சுரூபம்தான் இன்று "புதுமை மாதா" சுரூபம் எனப் போற்றப்பெற்று வருகின்றது.

## வேத போதக நிலையம்

காவிரியின் வடிகாற் பகுதியிலமைந்த மண்வள நலத் தால், பூண்டியில் வாழ்ந்த கத்தோலிக்கரும், செல்வமும் செல்வாக்கும் மிக்கவர்களாக விளங்கினர். இத்துடன், இவ்வூர் சிறந்ததொரு "வேதபோதக நிலைய"மாகவும் இலங்கியது. சிறுவர்களுக்காக ஒரு தொடக்கநிலைப் பள்ளியும் வேதியர் (உபதேசிமார்)களுக்கான ஒரு பயிற்சி நிலையமும் இங்கு இருந்தன. இரு குருமாரின் மேற் பார்வையில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இங்குத் தங்கி வேதியர் பணிக்கான பயிற்சிபெற்று வந்தனர் எனத் தெரிகிறது. அந்நிய வேதபோதக சபையைச் சேர்ந்த சங்கைக்குரிய மோந்தே சுவாமிகள் 4 பகுதிகளாக அமைந்த "ஞானோபதேசப் பர்வதம்" என்னும் சிறந்த நூலை இங்கிருந்துதான் எழுதினார்.

## இயற்கையால் விளைந்த அவகேடுகள்

இந்தச் செழிப்பும் செல்வாக்கும் மிக்க நிலை நெடுநாள் நீடிக்கவில்லை "இன்பமும் துன்பமும் சுழலும் சக்கரம்" அல்லவா? காவிரி, கொள்ளிடம் என்னும் இரு பெரிய ஆறுகளுக்கிடையில் இவ்வூர் அமைந்திருந்ததால், அடிக்கடி அவற்றின் வெள்ளப் பெருக்குக்குள்ளாகி, வருந்த நேரிட்டது வேதியர் பயிற்சி நிலையம், பத்திர மான வேறிடத்திற்கு மாற்றப்பட்டுவிட்டது. குடிமக்களிற் பெரும்பாலோரும் ஆபத்து அவ்வளவாக இல்லாத இடங் களுக்குக் குடிபெயர்ந்து செல்லலாயினர். பூண்டிப் பங்கும் எடுபட்டு, அருகிலுள்ள மிக்கேல்பட்டிப் பங்கின் ஒரு பகுதியாயிற்று. 1924ல் நேர்ந்த காவிரிப் பெரு வெள்ளம் பூண்டி ஆலயத்தை நாற்புறமும் சூழ்ந்து கொண்டுவிட்டது. ஒரு படகு மூலம், மாதா சுரூபத்தை மிக்கேல்பட்டிக்குக் கொண்டுசென்று, அங்குள்ள ஆலயத்தில் வைத்து வணக்கம் செலுத்தி வரலாயினர். நாளாவட்டத்தில் மிக்கேல்பட்டி மக்கள், பூண்டிமாதா சுரூபத்தைத் தங்களிடமே வைத்துக்கொள்ளவும், பூண்டிக்கு வேறொரு சுரூபத்தை வாங்கிக்கொடுக்கவும் திட்டமிட்டனர். ஆனால், பூண்டி மக்கள் இதற்கு இணங்கவேயில்லை. அந்த சுரூபத்தை எப்படியாகிலும் தங்கள் ஊருக்குக் கொண்டுவந்துவிட வேண்டுமென்று விடாப்பிடியாக முயன்று வந்தனர். அவர்கள் முயற்சியும் வெற்றிபெற்றது. 1925ல் சுரூபத்தைத் தங்கள் ஊருக்குக் கொண்டுபோனதுடன், வழக்கம்போல ஆண்டுத் திருவிழாவும் கொண்டாடிவரலாயினர்.

## மீண்டும் பூண்டியின் உயர்வு

மிக்கேல்பட்டிப் பங்குக் குருவாக இருந்த சங். M P. சின்னப்பநாதர் சுவாமிகளின் விடாமுயற்சியால், கும்பகோணம் மேற்றிராணியார் அருட்பெருந்தகை பீட்டர்பிரான்சிஸ் ஆண்டகையவர்கள் 1945-ல் பூண்டியை மீண்டும் தனிப்பங்காக உயர்த்தினார்கள். தொடக்கதிலேப்

பள்ளியும் மீண்டும் தொடங்கப்பெற்றது. அமலோற்பவ மாதாவின் சலேசியன்சபைக் கன்னியர் அதற்கான பொறுப் பேற்றனர். இதற்கிடையில், இறைவனின் அருட்பிரசன்னம் இத்தலத்திலிருப்பதற்கான அறிகுறிகள் சில தோன்ற லாயின. இரவுவேளைகளில், ஏதோ புதுமையான ஒளி ஆலயத்தினுள் பரவி இருப்பதாகத் தெரிந்தது; ஆல யத்தைத் திறந்து பரிசோதித்துப் பார்க்கையில், நெருப்பு எதுவும் அங்கு எரியவில்லை என்பது புலனாகியது. இங்ஙனம் பல தடவைகளில் நிகழ்ந்தது. ஊரிலுள்ள முதியவர்கள் இந்த நிகழ்ச்சிபற்றி இன்றும் உறுதி கூறுகின் றனர். தம் அன்னையின் வழியாய் தம் அருள்திறம் விளங்குமாறு, நம் ஆண்டவர் இத்திருத்தலத்தைத் தேர்ந் தெடுத்துள்ளார் என்னும் எண்ணம் மக்களிடையே உறுதி பெறலாயிற்று.

ஏறக்குறைய இந்தச் சமயத்தில்தான், புதுமையாகக் குணமடைந்த ஒரு நிகழ்ச்சிபற்றியும் அறிவிக்கப்பெற்றது. மிக்கேல்பட்டியைச் சேர்ந்த ஞானதிக்கம் என்பவர் இன்ன தென்று எவருக்கும் புலப்படாத ஒருவகை வயிற்றுவலியால் துன்பப்பட்டார். எவ்வளவோ மருத்துவம் செய்து பார்த்தும், அது குணமாகவில்லை. பூண்டிப் புதுமை மாதாவை அண்டி வேண்டிக்கொள்ளவே அந்த விந்தையான நோயினின்றும் அவர் புதுமையாகக் குணமடைந்தார். தம் நன்றியறிதலின் அறிகுறியாக, ரூ. 150 பெறுமான, திவ்ய சற்பிரசாதக் கதிர்ப்பாத்திரம் ஒன்றை ஆலயத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார் அந்தக் கதிர்ப்பாத்திரம் இன்னமும் ஆலயத்தில் இருக்கின்றது. நமக்குத் தெரிந்தவரை, இதுவே, இத்திருத்தலத்தின் முதற்புதுமை எனலாம்.

மற்றொரு நிகழ்ச்சி, சென்னையிலிருந்த இருவர் பற்றியது; ஒருவர் புராட்டஸ்டாண்டுக் கிறிஸ்தவர்; மற்றொருவர், இந்து. முன்னவர், தீராத ஒரு நோயால் வருந்தினார். பின்னவர், ஏதோ ஒரு வேலை கிடைக்க

வேண்டுமென்று விரும்பினார். ஒரே சமயத்தில் இவ்விருவருக்கும், கனவில் யாரோ ஒருவர் தோன்றி, அவர்கள் கோரியது நிறைவேறியது என்றும், தஞ்சையிலுள்ள அலமேலுபுரம்-பூண்டி ஆலயத்திற்குச் சென்று நன்றி செலுத்த வேண்டுமென்றும் கூறினாராம். உடனே, இருவருமே இந்த இடத்தை விசாரித்தறிந்துவந்து, தங்கள் நன்றியைக் காணிக்கையாக அக்காலம் பங்குக் குருவாயிருந்த சங். M தாவீது சுவாமிகளிடம் தங்களாலியன்ற நன்கொடை அளித்துச் சென்றனர்.

## புகழ் பரவுகிறது

1955-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் பூண்டி வரலாற்றிலேயே ஒரு திருப்பம் நேர்ந்தது எனில், அது மிகையன்று. சங். V. S. லூர்து சேவியர் சுவாமிகள் பங்குக் குருவாகப் பொறுப்பேற்றார்கள்.

வெடிப்புகளோடு, ஆபத்தான நிலையிலிருந்த ஆலயத்தின் நடுச்சாலையைச் சரிப்படுத்துவதிலேதான், அவர்தம் கவனம் முதலில் சென்றது. பளுவான மேற்சுவர்ப்பகுதி எந்தநேரத்திலும் இடிந்து விழுந்து, கோவிலுக்கு வருபவர்களுக்கு ஆபத்து நேரக்கூடும் என அஞ்ச வேண்டிய நிலையிலிருந்தது. கட்டிடத்தொழில் வல்லுநரை அழைத்துக் கலந்தாலோசித்ததில், முகப்புவளைவையும், பீடத்தையும் அதற்கு மேலிருந்த விதானத்தையும் அப்படியே விட்டுவைத்து, நடுச்சாலைப் பகுதியைமட்டும் இடித்துத்தள்ள ரூ. 1500 செலவாகும் எனத்தெரிய வந்தது. இவ்வாறு பழைய கட்டிடத்தை இடித்துப் புதிதாகக்கட்டுவதற்கு ஏராளமான பணம் தேவையாகுமே; அதற்கு எங்கேபோவது? என்று புதிய பங்குத்தந்தை திகைத்துக்கொண்டிருந்தார்.

ஆனால், அவருடைய கவலை யாவும் புதுமையாக நீங்கியது. 1956-ஆம் ஆண்டு, நவம்பர் 22-ஆம் நாள், வெள்ளிக்கிழமை, பிற்பகல் 1 மணியளவில், கோவிலிலோ,

அதற்கு அருகிலோ, ஒருவரும் இல்லாதபொழுது, கோவிற் புறமிருந்து திடீரெனப் பேரொலியொன்று கேட்டது. பங்குக்குருவும் மக்களும் ஆலயத்தைநோக்கி ஓடினர். என்ன புதுமை! நடுச்சாலைப் பகுதிமட்டும் சொல்லி வைத்தாற்போல், இடிந்து நொறுங்கி விழுந்து கிடந்தது; முகப்புவளைவும், பீடமும், விதானமும் அப்படியே, விள்ளாமல், விரியாமல், நின்றுகொண்டிருந்தன. ரூ. 1500 செலவில் ஆகவேண்டிய வேலை, ஒருகாசுகூடச் செலவில்லாமலும் எவருக்கும் எவ்வகைத் தீங்கும் நேரா மலும், கண்மூடித் திறக்கும் நேரத்துக்குள் முடிந்து விட்டது. இதிலிருந்தே, இறைவனின் அருட்கரம் இத்தலத்திலிருப்பது தெரியவந்தது. பங்குத்தந்தை சங். V. S. லூர்து சேவியர் சுவாமிகளின் உள்ளத்தில், இந் நிகழ்ச்சி மிக ஆழமாகப் பதிந்தது. தம் நன்மைத்தனத் தையும் இரக்கத்தையும் வெளிப்படக் காட்டுவதற்காக, இறைவன் இத்திருத்தலத்தைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத் துள்ளார் என்பது, அவருக்குத் தெளிவாகத் தெரிந்தது.

அடுத்து, மற்றொரு சம்பவம். கண் தெரியாத ஒரு பெண்பிள்ளை, ஒரு துணையாளுடன், பூண்டி ஆலயத்துக்கு வந்து போய்க்கொண்டிருந்தாள். ஒருநாள், பலிபூசை முடிந்தபிறகு, அந்தப் பெண்பிள்ளை, பங்குத்தந்தையிடம் வந்து "சுவாமி, எனக்குக் கண் தெரியாமலிருந்தது. எனக்குப் பார்வை அளிக்கும்படிப் பூண்டி மாதாவை வேண்டினேன். பூண்டிப் புதுமைமாதா எனக்குப் பூரண பார்வை அளித்துவிட்டாள்; அவளுக்கு நன்றி," என்று சொன்னாள். இதைக் கேட்டதும், "பூண்டி மாதாவை நாடி வருவோர் ஆறுதல் பெறுவர்; குணம் அடைவர்" – என்பதைப் பங்குத் தந்தை உறுதியாக நம்பலானார். எனவே, அன்றுமுதல், இத்திருத்தலத்திற்கு எவர் வந்தாலும் அவர்களை அன்னையின் ஆலயத்திற்குள் அழைத்துச்சென்று, செபிக்கச்சொல்லி, ஆசீர்வதித்து, அவர்கள் நாடும் வரமும், தேடும் குணமும் கிடைக்கும் என உறுதி கூறினார். இறைவன் அருளிலும்,

அவர்தம் திரு அன்னையின் வேண்டுதலிலும் அவருக்கிருக்கும் அளவுகடந்த நம்பிக்கையின் பயனை யாவரும் நன்குணர்ந்து வருகின்றனர்.

## பூண்டிப் புதுமை மாதா

பரிசுத்த தேவதாயின் வழியாய், மிகவும் பரிசுத்த திரித்துவத்தை நோக்கி வேண்டும் ஓர் எளிய செபத்தின் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள், நோய்களினின்று குணமடைகின்றார்கள். தொல்லைகள், துன்பங்களினின்று விடுபடுகின்றார்கள். எனவே, **பூண்டி மாதா புதுமைகளின் மாதா** என, யாவராலும் ஒருவாய் மொழியாகப் போற்றிக் கொண்டாடப்பெற்று வருகின்றாள்.

## புதிய ஆலயம்

ஆலயத்தின் நடுச்சாலைப் பகுதி, தானே இடிந்து விழுந்தபிறகு, அதனைப் புதுப்பிப்பதுபற்றிச் சங். லூர்து சேவியர் சுவாமி பெரிதும் கவலைப்படலானார். ஆனால், மாதாவின் அருளால், அவருடைய கவலையெல்லாம் விரைவில் நீங்கியது. 'கட்டிடத்திற்குப் பணம்', என்று வேண்டுகோள் எதுவும் விடுக்காமலே புதுமையாகப் பணம் வரத்தொடங்கியது. மக்கள் திரள் திரளாக வந்து, குறையிரந்து வேண்டிநின்று, மன நிறைவோடு மீண்டனர். மக்கள் பெற்ற நன்மைகளும் அடைந்த குணங்களும் ஏராளமானவை; நம்பமுடியாதவை. சாதி, சமய வேறுபாடின்றி யாருக்குமே மாதா தன் அருள் மாரியைப் பொழியலானாள். நன்றிக் கடிதங்கள் வந்து குவிந்தன. தாராளமாக வழங்கிய நன்கொடைகள் ஏராளமாக வந்தவண்ணமிருந்தன. எவரிடமும், பங்குத் தந்தை பணம், காசு என்று கேட்டதேயில்லை. 1957ஆம் ஆண்டு மே மாதம் கடைசிச் சனிக்கிழமையன்று, காலை 9 மணிக்குக் கும்பகோணம் மேற்றிராணியார் அருட்பெருந்தகை D. பவுல் அருள்சாமி ஆண்டகையவர்கள் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டியதுடன், தம்மாலான நன்கொடையையும் தாராளமாக வழங்கியருளினார்கள். 1964ஆம் ஆண்டு

மே மாதம் முதற் சனிக்கிழமையன்று, அவர்களே ஆலயத்தை முறைப்படி அபிஷேகமும் செய்தார்கள். மக்கள் மனமுவந்தளித்த சிறு துளிகளெல்லாம் சேர்ந்து பெருவெள்ளமாகியதால், படிப்படியாக வளர்ந்துயர்ந்த இந்த அழகிய ஆலயம், மாதாவின் அருட்கொடையின் பெருமைக்கோர் அணிகலனாய், இன்று காட்சியளிக்கின்றது.

## பூண்டித் தந்தை

பூண்டித் திருத்தலத்தின் தந்தையாகிய அருட்திரு V S. லூர்துசேவியர் அடிகளார் பல நோய்களுக்கு ஆளாகி, அடிக்கடி திருச்சி குழந்தை இயேசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக வந்து சில நாட்கள் தங்கி சுகம் கிடைத்ததும் பூண்டிக்குச் சென்று தம் அலுவல்களை கவனித்து வந்தார். இப்படி ஒருமுறை திருச்சி குழந்தை இயேசு மருத்துவமனையிலிருக்கும்போது, 16—4—1972 அன்று காலைக் கடைசி தேவதிரவிய அநுமானங்களைப் பெற்று இறைவனின் திருவடி சேர்ந்தார். மறுநாள் கும்பகோணம் ஆயர் அருட்பெருந்தகை D. பவுல் அருள்சுவாமி ஆண்டகை பூண்டி கோயில் கோபுரத்திற்கு அடியில், பூண்டி தந்தையை நல்லடக்கம் செய்தார்.

அவ்வமயம் பெங்களூர் பேராயர் பேரருட் பெருந்தகை P. ஆரோக்கியசுவாமி ஆண்டகை அனுப்பிய செய்தி குறிப்பிடத்தக்கது :— "பூண்டியின் பங்கு தந்தையாக விளங்கிய அருட்திரு லூர்துசேவியர் அடிகளார் இப்போது இறைவனின் திருவடிக்குச் சென்றுவிட்டார்கள். பூண்டித் திருத்தலத்திற்கு வருகைதரும் பக்தர்களுக்காக இதுவரை வேண்டிவந்த தந்தை, இனி, இன்னும் அதிக மாக பயனளிக்கும் வகையில் இறைவனிடம் வேண்டிக் கொள்ளுவார். அவரது கல்லறை திருயாத்திரைத் தலமாய் விளங்கும் என்று உறுதியாய் நம்புகிறேன்."

## பூண்டி, திருயாத்திரைத்தலம் ஆதல்

அமலோற்பவமாதா திருநாள், டிசம்பர் 8ஆம் நாள் என்ருலும், இத்திருத்தலத்தின் பாதுகாவலியான மாதா திருநாள் பிரதி வருஷம் மே மாதம் 15-ம் தேதியில் வழக்கமாகக் கொண்டாடப்பெற்று வருகின்றது. திருநாளுக்குமுன், நவநாள் வணக்கம் விமரிசையாக நடைபெறும். திருநாளின்போதும், ஆண்டு முழுதும் இங்கு வந்துபோகும் திருயாத்திரிகரின் வசதிக்காகப் பல அறைகள் கட்டப்பெற்றுள்ளன. குளிப்பதற்கான வசதியும் உண்டு. உணவுச்சாலையொன்றும் இயங்கி வருகின்றது. இந்தியா முழுவதினின்றும், ஏன், வெளிநாடுகளிலிருந்தும் முதலாய், திருயாத்திரிகர் வந்தவண்ணமிருக்கின்றனர். எல்லாச் சாதி, சமய இன மக்களும் இங்கு வரக் காணலாம். யாவரும், தாங்கள் கோரும் ஆன்ம, சரீர நன்மைகளைப் பெற்றும், வருந்தும் பிணிகளின்று குணமாகி நலமடைந்தும், துன்புறும் துயரங்கள், தொல்லைகளின்று நீங்கியும், இறைவனின் அருளிலும் அன்பிலும், நம்பிக்கையும் ஊக்கமும் கொண்டு, முழு மனநிறைவோடு, தத்தம் இடங்களுக்குத் திரும்புகின்றனர்.

கடவுள் நம்பிக்கையும் நல்லொழுக்கமும் தளர்ந்து கொண்டு வரும் இக்காலத்தில், இப்பூண்டித் திருத்தலம் இறைவன் பெருமையையும் வல்லமையையும் நாளும் எவர்க்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது என்பதிற் சிறிதும் ஐயமில்லை.



வந்த நோய், பிணி அகல,

வருந்தும் துயரம், தொல்லை நீங்க,

நாடும் நன்மையை அடைய

**பூண்டிப் புதுமை மாதாவை**

**ஒருமுறை வந்து தரிசியுங்கள்!**

ஐயம் யாவும் நீங்கும் ;

உண்மை நன்கு விளங்கும் ;

உள்ளத்தில் அருளொளி துலங்கும்!

**வருக! வருக! வருக!**

# பக்தர்கள் அடைந்துள்ள பேறுகள்

(1)

## புதுமையான குணம்

1968 அக்டோபரில் எனக்குக் கடுமையான நோயொன்று கண்டது. டாக்டர்கள் கைவிட்டு விட்டார்கள்; பிழைப்போம் என்ற நம்பிக்கையும் எனக்கில்லை. அந்நிலையில், பூண்டிப் புதுமை மாதாபற்றிக் கேள்விப்பட்டேன். அந்த அன்னையை நோக்கி உடனே வேண்டிக்கொண்டேன். அவளுடைய உதவியால், நான் புதுமையாக, முழுதும் குணமடைந்தேன். எல்லோருக்கும் ஆச்சரியமாகப் போய்விட்டது. என் நன்றிக் காணிக்கையாக ரூ. 1000 இத்துடன் அனுப்பியுள்ளேன்.

இந்த மாதிரியே கஷ்டப்பட்ட வேறு பலரும் பூண்டிப் புதுமை மாதாவின் அருளால் சுகமடைந்துள்ளனர்.

**திருமதி டெனிஸ்கொரரையா,**
16, புனித லாரன்சு தெரு,
புதுச்சேரி.

(2)

## அறுவை மருத்துவம் தேவைப்பட்ட நோய், மருந்து முதலாய் இல்லாமற் குணமானது

என் கணவரும் நானும் தங்கள் உதவிக்காகவும் செபங்களுக்காகவும், சிறப்பாக, நோயுற்ற என் முழங்கால் சரியாவதற்குத் தேவையாயிருந்த, கடுமையான அறுவை மருத்துவம் இல்லாமலே முழுதும் குணமானதற்காகவும் தங்களுக்கு மிக்க நன்றியுடையவர்களாயிருக்கிறோம்.

இரண்டு வாரங்களுக்குமுன், எனக்கு அறுவை மருத்துவம் நடைபெறுவதாக இருந்தது. அதற்குப் பதிலாக நான் பூண்டிப் புதுமை மாதாவின் திருத்தலத்தைச் சந்திப்பதென முடிவு செய்தேன். எவ்வளவோ நேரவுக்கும் தொல்லைகளுக்குமிடையே, என் கணவ

ரோடும், 7 சிறு குழந்தைகளோடும் நெடுந்தொலைவி லிருந்து அலுத்துக் களைத்துப் பயணஞ் செய்து, தங்கள் அழகிய ஆலயத்தை அடைந்தேன்.

காரிலிருந்து இறங்கியதும், என் முழங்காலிலிருந்த 'முடக்கம்' நீங்கியதாக உணர்ந்தேன்; வழக்கம்போலவே, என்னால் நடக்க முடிந்தது. அன்பான தந்தையே, இது ஒரு புதுமையே தவிர, வேறல்ல. நம் புனித அன்னையால் நான் இங்ஙனம் ஆசீர்வதிக்கப் பெற்றது பெரும் பேறெனவே கருதுகின்றேன். அசைக்க முடியாத விசுவாசத்தோடு, நான் தங்களிடம் வந்தேன்; என் விசுவாசம் என்னைக் குணப்படுத்தியது.

இதற்காக நான் என்றும் தங்களுக்கு மிக்க நன்றி யுடையவளாயிருப்பதுடன், பூண்டி மாதா பக்தியைப் பரப்ப என்னாலானதெல்லாம் செய்வேன் எனவும் வாக்களிக்கின்றேன்.

16/1, வுட் தெரு<br>
பெங்களூர்—25

திருமதி எம். பார்ட்லே

(3)

## தீராத நோய் குணமானது

எங்கள் மகன், மரியதாசன் பி. ஏ.க்கு நேர்ந்த நோய்க்கு மருத்துவர்களால் எதுவுமே செய்ய முடியா தென்று தெரிந்ததும், பூண்டியில், கடவுளுடைய அருள் இந்நாட்களில் வெளிப்படும் நல்ல செய்தி எங்களுக்குக் கிடைத்தது. எங்கள் முழு நம்பிக்கையையும், கடவுள் மேலும், அவர்தம் அன்னையின் மேலும் வைத்து, பையனைப் பூண்டிக்குக் கொண்டு சென்றோம். கடவுளின் இரக்கத்தாலும், அன்னையின் பரிவாலும், பங்குக் குரு சங். V.S லூர்து சேவியர் சுவாமிகளின் செபங்களாலும் எங்கள் மகன் இரு வாரங்களுக்குள் புதுமையாகக்

குணமடைந்தான். இறைவனுக்கும் அவர்தம் புனித அன்னைக்கும் எங்கள் நன்றி. எங்களைப் போலத் தொல்லைகட்குள்ளாகித் துன்புறும் அனைவரையும் இங்ஙனமே ஆசீர்வதிப்பார்களாக.

இராமவர்மபுரம்
நாகர்கோயில்

திரு. பெர்னார்டு,
திருமதி ஏ. மேரி.

(4)

## மூன்று ஆண்டுகளாக வருந்திய நோய் முழுதும் குணமானது

6—1—'67 அன்று, நான் பூண்டிக்கு வந்து தங்களைச் சந்தித்தேன். தாங்கள் என்னைப் பீடத்தண்டையில் வைத்து ஆசீர்வதித்து, ஏதோ மருந்து கொடுத்து உதவினீர்கள். முதலில், எனக்கு, ஓரளவு குணம் தெரிந்தது; அதுபற்றி நான் தங்களுக்குத் தெரிவித்தேன். மருந்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வரும்படி எனக்கு எழுதினீர்கள்.

ஆண்டவரருளால், நான் இப்பொழுது முழுதும் குணமாகிவிட்டேன். 3 ஆண்டுகளாக நீடித்த நோய், இறைவனருளால் முழுதும் குணமாகிவிட்டது. எனக்குச் செய்த உதவிக்காகக் கடவுளுக்கும் தங்களுக்கும் நன்றி கூறுகிறேன். என் நன்றிக் காணிக்கையாக, ரூ. 10 மணியார்டர் அனுப்பியுள்ளேன்; அது நாளைக்குக் கிடைக்கும். மார்ச், ஏப்ரலில், பூண்டி வரலாமென எண்ணியிருக்கிறேன்.

இராதா நகர்
சென்னை–44.

காட்வின்தாசன், பி. ஏ. பி. எல்.

(5)

## 'பூண்டிமாதா' என்றவுடனே பைத்தியம் தெளிந்து

என் சகோதரன், அன்வர் என்பவரின் திருமண அழைப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். அவனைத் தங்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகின்றேன். 'பூண்டி மாதா' என்றவுடனே பைத்தியம் தெளிந்து குணமானானே, அவன் தான்.

இதெல்லாம் நடந்த விதத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்: முதன் முதலில், தூக்கமின்மையால், வெகு வாய்த் தொல்லைப்பட்டான்; மெள்ள மெள்ளப் புத்தி தடுமாற்றத்தின் அறிகுறிகள் காணப்பட்டன. எந்த மருத்துவ உதவியும் அவனைக் குணமாக்க முடியவில்லை. இறுதியில், அவன் கட்டுக்கடங்காமற் போகவே, அவனை ஓர் அறையிலடைத்துப் பூட்டிவிட்டோம்.

எங்கள் நண்பர்களுள் ஒருவர் தங்களிடம் வந்து, அவனுக்குக் குணமாகும்படி வேண்டிக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். தாங்களோ, அவனைப் பூண்டிக்குக் கொண்டு வரும்படி கண்டிப்பாகச் சொல்லிவிட்டீர்கள். எனக்கோ, அறைக்குள்ளே பூட்டி வைக்க வேண்டியிருந்த பைத்தியத்தைப் பூண்டிக்கு எப்படிக் கொண்டுவருவதென்று தோன்றவில்லை. ஆனால், நான் அவனிடம், "வா, தம்பீ, பூண்டி மாதா கோவிலுக்குப் போவோம்," என்றேன். இந்த என் வார்த்தைகளைக் கேட்டவுடனே, அவன் மின்சாரத் தாக்குதலுக்கு ஆளானவன்போல என்னைத் திரும்பிப் பார்த்தான். குடிக்கத் தண்ணீரும் சாப்பாடும் கேட்டான்; கொடுத்தோம். சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்கினான். இதற்குமுன் எத்தனையோ வாரங்களாக அவன் கண் இமைகளை மூடியதுகூட இல்லை. மறுநாட் காலை அவன் கோளாறு எதுவுமே அற்றவனாகக் காணப்பட்டான். 'பேசாமல்,' எங்களோட பூண்டிக்கு இரயிலிலும், பஸ்ஸிலும். நடந்தும் வந்தான். தங்கள் ஆசிரையும், மருந்து வகைகளையும் தானே பெற்றுக்

கொண்டான். அது முதல் அவன் முழுதும் குணமாகி விட்டான். இப்பொழுது, வியாபாரத்தை ஒழுங்காக, திறமையாகக் கவனித்து வருகின்றான். அவனுக்குத் திருமணம் செய்து வைக்கவும் ஏற்பாடாகிறது. அழைப்பும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அதற்குத் தங்கள் ஆசீரை வேண்டுகிறேன்.

திருச்சிராப்பள்ளி. டி. எம். ஏ. ஹுசேன்.

(6)

## காசநோய் புதுமையாகக் குணமானது

திருச்சிராப்பள்ளி, குழந்தைசேசு மருத்துவமனை, வாகன டிரைவருக்குக் காசநோய்; இராஜாஜி காசநோய் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று வந்தான். 1968ல் பூண்டிப் பங்குக் குரு சங் V. S. லூர்து சேவியர் சுவாமிகள் 3 மாத காலம் குழந்தை சேசு மருத்துவமனையில் தங்கி, சிகிச்சை பெற்றுவரும்பொழுது, இந்த டிரைவர் பெரிதும் அவதிப்பட்டுக்கொண்டிருந்தான். இராஜாஜி மருத்துவ மனையில் இவனை எக்ஸ்-ரே எடுத்துப் பார்த்துவிட்டு, "விலா எலும்பு ஒன்று அரிக்கப்பட்டுவிட்டது; அதை உடனே எடுத்துவிடவேண்டும்", என்று சொல்லி, வேலூரிலுள்ள C. M. C. மருத்துவமனை அதிகாரிகளுக்கு, உடனே அறுவை மருத்துவம் செய்யுமாறு, சிபாரிசுக் கடிதமும் கொடுத்துவிட்டார்கள்.

வேலூருக்குப் புறப்படுமுன், குழந்தை சேசு மருத்துவ மனையில், தனி வார்டு ஒன்றில் தங்கியிருந்த சங். லூர்து சேவியர் சுவாமிகளைக் கண்டு ஆசீர்பெறப் போனான், அந்த டிரைவர் சுவாமியவர்களோ, அவனை ஆசீர்வதித்து, "அறுவை எதுவும் தேவையில்லை; பூண்டிப் புதுமைமாதா செபத்தைக் காலை மாலை சொல்லியும், நான் கொடுக்கும் மருந்து வகைகளை ஒழுங்காகச் சாப்பிட்டும் வந்தால்,

30 நாட்களுக்குள் முற்றிலும் குணமாகிவிடும்''. என்றூர்கள். அவனும், விடாது, செபத்தைச் சொல்லியும், மருந்தைச் சாப்பிட்டும் வந்தான். ஒரு வாரத்திற்குள், வலியும், நோயின் மற்ற அறிகுறிகளும் நீங்கலாயின; ஒரு மாதத்திற்குள், அவன் முழுதும் குணமாகிவிடவே, சங். லூர்து சேவியர் சுவாமிகளைப் போய்க்கண்டு நன்றி தெரிவித்தான்.

சுவாமியவர்கள் கேட்டுக்கொண்டபடி. இராஜாஜி மருத்துவமனை அதிகாரிகளிடம் மீண்டும் போய்க் காட்டவே, அவர்களும் அவனைப் பரிசோதித்தார்கள். பழுதான விலா எலும்பு, சீராகியிருந்தது. டாக்டர்களுக்கோ, ஒரே ஆச்சரியம்! உண்மையில், அது ஒரு புதுமையான செயலேயென்றும், இனி அறுவை தேவையில்லையென்றும் சொல்லிவிட்டார்கள்.

(7)

## காணுமற்போன நகை அற்புதமாக மீண்டும் கிடைத்தது

திருச்சிராப்பள்ளியில், வாழ்ந்துவரும் ஒரு கத்தோலிக்கப் பெண், ஒருநாள் கோயிலுக்குப் போயிருந்த பொழுது, அவளுடைய தாலிக்கொடி காணுமற்போய் விட்டது. தலை குனிந்து வணங்குகையில், எப்படியோ நழுவி விழுந்துவிட்டதுபோலும்! கோவிலில் எல்லா விடத்திலும் தேடிப்பார்த்தும், பலனில்லை. பங்கு சுவாமியாரிடம் சொல்லி, சனங்களிடம் இதுபற்றி அறிவிக்கும்படி கேட்டுக்கொண்டாள். துப்புத் துலங்கவேயில்லை.

சங். லூர்து சேவியர் சுவாமிகள், தம் உடல்நலம் பற்றிச் சரிபார்த்துக்கொள்வதற்காக, மாதாமாதம் குழந்தை சேசு மருத்துவமனைக்கு வருவதாக அந்த அம்மாள் கேள்விப்பட்டு, ஒருமுறை அதற்காக அங்கு வந்த அவரிடம் இதைப்பற்றிக் கூறி என்ன செய்வதென்று ஆலோசனை கேட்டாள். சுவாமியவர்கள் பூண்டிப் புதுமை மாதாவைக் குறித்து எளிய செபம் ஒன்றைச்

சொல்லிக்கொடுத்துக் காலை மாலை அதைத் தவருமல் சொல்லிவந்தால், 3 நாட்களுக்குள் அவள் தாலிக்கொடி கிடைத்துவிடும் என்று உறுதி கூறிஞர்கள். அப்படியே அவளும் அவள் குழந்தைகளும் அந்த செபத்தைக் காலையும் மாலையும் விடாமற் சொல்லிவந்தார்கள். மூன்ரும் நாள், வழக்கம்போல், அந்த அம்மாள் கோவிலுக்குச் சென்ருள்; நன்மை வாங்கியபின், தன் இடத்திற்கு வரும் பொழுது, 6 அல்லது 7 வயதுள்ள ஒரு சிறுமி இவள் கையில் ஏதோ ஒன்றைத் திணித்துவிட்டுக் கும்பலோடு கும்பலாய் மறைந்தோடிவிட்டாள். மூன்று நாட்களுக்கு முன் காணுமற்போன தாலிக்கொடிதான் அது. அன்று மாலையே மருத்துவமனையிலிருந்த சங். லூர்து சேவியர் சுவாமிகளிடம் சென்று, கண்ணீர் வடித்த வண்ணம், நிகழ்ந்ததை நன்றியுள்ளத்தோடு கூறித் தன் தாலியை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொண்டாள்

(8)

## தொல்லைகள் நீங்கிக் கோரியது கிடைத்தல்

எனக்கு நேர்ந்த தொல்லைகள் நீங்கவும், கோரின காரியம் கைகூடவும் வேண்டுமென்று, பூண்டிபற்றிக் கேள்விப் பட்டவுடனேயே, பூண்டிமாதாவை நாடினேன். மாதாவின் மகிமையைக் குறித்துச் செபிக்கத் தொடங்கிய சில நாட்களுக்குள்ளாகவே, என்னுடைய தொல்லைகள் யாவும் நீங்கியதுடன், நான் கோரிய காரியமும் முழுதும் நிறைவேறியது கண்டு, எனக்கே வியப்பாகப் போய்விட்டது. பூண்டி மாதாவின் வழியாய் யாவரும் நற்பயன் எய்த வேண்டுமென்பதே, என் விருப்பம். இக்காலத்தில், பூண்டித்திருத் தலம், உண்மையில் மாதாவின் அருளால் மக்களுக்குக் கிடைத்த ஒரு பெரும் வரப்பிரசாதமேயாகும்.

சேஷாத்திரிபுரம்
சிமோகா (மைசூர்)

**எஸ். பாஸ்கர்,**
**ஃபிட்டர் சார்ஜ்மென்,**
**தென் இரயில்வே.**

(9)

## சிறுநீர்ப்பைக் கோளாறு அற்புதமாய்க் குணமானது

என் மகன் ஜ-டு மரிய சாமுவேல் அற்புதமாகக் குணமான செய்தியை அறிவிக்கவும், பூண்டிமாதாவுக்கும் தங்கள் செபங்கள் வழியாய் உதவிசெய்த தங்களுக்கும் இதன் மூலம் நன்றியைத் தெரிவிக்கவுமே, இதை எழுதுகிறேன்.

என் மகனுக்கு வயது, பத்து. சிறு நீர்ப்பைக் கோளாறு காரணமாகப் பெரிதும் துன்பப்பட்டான்: உடலெல்லாம் வீக்கங்கண்டு, நாளுக்குநாள் பலவீனமாகிக் கொண்டே வந்தான். திருச்சிராப்பள்ளி மாவட்டத் தலைமை மருத்துவ மனையில் வைத்துப் பத்தியமான உணவளித்துப் பார்த்தோம். குணம் எதுவும் இல்லாமற் போகவே, புதுக்கோட்டையிலுள்ள ஒரு நிபுணரிடம் கொண்டுபோய்ச் சிகிச்சை அளித்துப் பார்த்தோம். முன்னேற்றத்திற்கே வழியில்லை. வேலூர், C. M. C. மருத்துவமனைக்குக் கொண்டுபோனோம். அங்கும் அவனை நன்கு சோதித்துப் பார்த்தபின், சிகிச்சை தொடங்கினார்கள். தொடக்கத்தில், பையன் சிறிது தேறுவதுபோலத் தோன்றியது. ஆனால், மீண்டும் நோய் முற்றியது

நண்பர்கள் ஆலோசனைக்கிணங்க, அவனைப் பூண்டிக்குக் கொண்டுவந்து, தங்களிடம் காட்டினேன். தாங்கள் அவனுக்குச் சில மருந்துகளைக் கொடுத்ததுடன், சில செபங்களும் சொல்லிவரும்படி செய்தீர்கள். என்ன புதுமை! ஒரு மாதத்திற்குள், அவன் முழுதும் குணமடைந்துவிட்டான். திருச்சி மாவட்டத் தலைமை மருத்துவமனைக்குக் கொண்டுபோய்க் காட்டினோம். இரத்தம், சிறுநீர் முதலானவற்றில் விரிவான பரிசோதனைகள் செய்து பார்த்ததில், முந்தின நோயின் அறிகுறி எதுவுமே அவனிடம் காணப்படவில்லை. முன்னர் அவனுக்குச் சிகிச்சை அளித்த டாக்டர்கள் யாவருமே, இறைவனருளால்தான் இது நேர்ந்தது என்று தெளிவாகச் சொன்னார்கள்.

பூண்டி மாதாவுக்கும் தங்களுக்கும் என் வாழ்நாள் முழுவதும் நன்றியுடையவனுயிருப்பேன்.

பீம நகர், திருச்சி. T. விக்டர் சாமுவேல்.

(10)

## நீண்டநாட்செவிடு, உடனே குணமானது

மிக்க மகிழ்ச்சியோடு, நான் தங்களுக்கு இதை எழுதுகின்றேன். 30-ஆம் தேதி பூண்டியிலிருந்து நாங்கள் திரும்பிவந்த பிறகு என் மகளுக்குத் தாங்கள் குறிப்பிட்ட சிகிச்சையைத் தொடங்கினேம். மூன்ருவது நாள், குடும்ப செபமாலை சொல்லிச் செபித்துக் கொண்டிருந்தபொழுது, குழந்தை கொட்டாவி விட்டாள்; தன் காதிலே ஏதோ குறு குறு என்பதாக அவளுக்குத் தோன்றியதாம். இப்பொழுது அவளுக்குக் காது நன்ருகக் கேட்கிறது. எத்தனையோ வருடங்களாக அவளுக்குக் காது மந்தமாகவே இருந்தது.

சென்னை—59 திருமதி சி. சி. சாம்ப்சன்

(11)

## 4½ வருட இருமல் குணமானது

என் மகன் 4½ வருடங்களாகக் கடுமையான இருமலால் மிகவும் துன்பப்பட்டான். லீவு கிடைத்தவுடன், மனைவி மக்களுடன் பூண்டிக்கு வருகிறேன் என்று நேர்ந்தவுடனே, அவன் முற்றிலும் குணமாகிவிட்டான்.

கோவா ஏ. பி. ரெட்டி.

(12)

## மகன் உயிர் காப்பாற்றப் பெற்றது

நான் அனுப்பியிருந்த ரூ. 100-க்கான மணியார்டர் தங்களுக்குக் கிடைத்திருக்கும் என நம்புகிறேன். போன மாதம், என் மகன் காரோலின், சிறுநீர், இரத்தக்

கோளாறுகளால் பெரிதும் துன்பப்பட்டாள். பூண்டிப் புதுமை மாதாவின் அருளால், இப்பொழுது அவள், முற்றிலும் குணமாகிவிட்டாள். அதற்கு நன்றியறிதலாகவே, இத்தொகையை அனுப்பியுள்ளேன். தங்கள் உதவிக்கு மெத்த நன்றி.

இறைவனின் அதிமிகு மகிமைக்காகத் தாங்கள் மேலும் பல்லாண்டு நலமே வாழ, ஆண்டவர் அருள்புரிவாராக.

மாங்கீர், பீகார். திருமதி டி. அருளப்பன்.

(13)

## உட்சதை வளர்ச்சி புதுமையாக மறைந்தது

என் மனைவிக்குக் கருப்பையில் உட்சதை வளர்ச்சி நேர்ந்துள்ளது பற்றிக் கவலையோடு தங்களை வந்து கண்டோம் அறுவை மருத்துவம் செய்தாக வேண்டுமென்று டாக்டர்கள் ஆலோசனை கூறினார்கள். தாங்களோ, 'அறுவை எதுவும் தேவையில்லை; பூண்டி மாதாவின்மீது நம்பிக்கை வைத்தால், நோய் குணமாகிவிடும்,' என்று அழுத்தமாக எடுத்துரைத்தீர்கள்.

நம் அன்னை உண்மையிலேயே புதுமை செய்திருக்கிறாள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தமாதம் 20-ஆம் தேதி, சென்னையிலுள்ள பிரபல நிபுணர் ஒருவரிடம் என் மனைவியை அழைத்துச் சென்றேன். அவர் அவளை நன்கு பரிசோதித்தபின், அப்படி உட்சதை வளர்ச்சி எதுவுமே இல்லையென்றும் அறுவை தேவையில்லையென்றும் கூறிவிட்டார். இதற்குமுன் இவளைப் பரிசோதித்துப் பார்த்தவர்கள் பம்பாயிலும் பெங்களூரிலுமுள்ள தலைசிறந்த பெண்நோய் மருத்துவ நிபுணர் ஆவர். தாங்கள் சொன்னதே சரியாய் இருந்தது.

புண்டி மாதாவுக்கும், தங்களுக்கும் அன்பு நன்றி சொல்லப் போதுமான வார்த்தைகளே இல்லை. இது ஒரு பெரிய புதுமையேதான். எங்கள் குடும்பம் முழுதும் நம் அன்னைக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது.

புதுச்சேரி. **பி. ஜே. பெர்ணண்டஸ்.**

(14)

## தீராத இரணம் புதுமையாகக் குணமானது

என் மகன் டேவிட், குணமானதுபற்றி இரண்டொரு வரி தங்களுக்கு எழுத விரும்புகின்றேன். அவனுக்குக் குழிப்புண் ஒன்று உண்டாகி, இரணமாக மாறியது. நாங்கள், அக்டோபர் 5-ஆம் தேதி வந்து தங்களைக் கண்டோம். தாங்களும் சிகிச்சையைத் தொடங்கினீர்கள். இப்பொழுது என்மகன் நலமாயிருக்கிறான். இரணப்புண் முற்றிலும் ஆறிவிட்டது. கடந்த 4 மாதங்களாக அவன் துன்பப்பட்டான். வேலூர், C.M.C. மருத்துவமனையிலும் சேர்த்தோம். அங்கு அவன் நிலைகண்டு எல்லோருமே திகைத்தனர். பூண்டிப் புதுமைமாதாவின் அருளாலும் தங்கள் வேண்டுதலாலும் என்மகன் முழுதும் குணமடைந்ததன் மூலம் ஒரு புதுமை நிகழ்ந்துளது என்பதில் ஐயமில்லை.

சென்னை—13 **திருமதி ஜே. சாட்டர்ட்டன்.**

(15)

## கிடைக்காது என்றிருந்த அலுவல் உயர்வு

கடந்த 3 ஆண்டுகளாக நான் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்த அலுவல் உயர்வு எனக்குக் கிடைத்ததற்காகப் பூண்டிப் புதுமை மாதாவுக்கு எனது பணிவான, உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அலுவல் துறையில் என் மேல்நிலையாளர், கீழ்நிலையாளர் யாவருமே, மறைமுகமாய், எனக்கெதிராக முயன்றுபார்த்தும், எனக்குக் கிடைக்கவே கிடைக்காது என்று தோன்றி

யது. பூண்டிப் புதுமைமாதாவின் அருளால், தடைகளெல்லாம் தவிடுபொடியாகி, எனக்கு அலுவல் உயர்வு ஆணை கிடைத்துவிட்டது.

ஜலகல்லி, மைசூர். சி. எஃப். தொம்ப்சன்.

## (16)

## கள்ளத்தனமாகக் கையாளப்பட்ட பணம் மீண்டும் கிடைத்தது

கடந்த மேமாதம் நான் அங்கு வந்திருந்தேன். பண்ருட்டியில் ஒரு பாக்குக் கம்பெனி எனக்கு உண்டு என்று தங்களிடம் சொல்லியிருக்கிறேன். என்னுடன் வேறிருவரும் பங்காளிகள். அவர்களுக்கு முழு அதிகாரமும் வழங்கியிருந்தேன். ஆனால், அவர்கள் என்னை ஏமாற்றிப் பெருத்த நஷ்டமடையச் செய்துவிட்டார்கள்.

'நீ அஞ்சவேண்டாம்,' என்று எனக்குத் தெம்பூட்டிப் பூண்டிப் புதுமை மாதாவின் செபமும், படமும் தந்துதவினீர்கள். நான் கோயிலுக்குச்சென்று. செபித்தேன்; அமைதியும் நம்பிக்கையும் அடைந்தேன். நவநாள் முடிந்ததும், பங்காளிகளுள் ஒருவர் எனக்குச் சேரவேண்டிய பழைய தொகையையும், முன்பணத்தையும் தாமாகவே கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார்.

திருச்சூர்–1, கேரளம். சி. ஏ. ஔசேபு.

## (17)

## வீடுபற்றிய நீதிமன்ற வழக்கு வெற்றி

இறைவனருளாலும், அவரன்னையின் பரிவாலும் எங்கள் வீடுபற்றிய வழக்கில் வெற்றி பெற்றதற்கு மிக்க நன்றி. இதற்காக வேண்டிக்கொள்ளுமாறு தங்களுக்கு எழுதியிருந்தது, நினைவிருக்கலாம். ஜூன் 20-ஆம் தேதி வெற்றி கிட்டியது.

சென்னை-1 போலாந்தா ஹென்றிக்கஸ்.

(18)

## கடன்கள் யாவும் ஓரே வாரத்தில் அடைக்கப்பெற்றன

பூண்டிப் புதுமை மாதாவின் பாதத்தில் வைக்க வேண்டுமென்று நான் ஒரு விண்ணப்பம் அனுப்பினேன். ஒரு வாரத்திற்குள் என் கடன்களையெல்லாம் நான் திருப்பிக்கொடுக்க முடிந்தது. நம் தெய்வ அன்னைக்கும், தங்கள் செபங்களுக்காகத் தங்களுக்கும், நன்றி.

மேட்டூர் அணை — அக்னேஸ் கொரேய்ரா.

(19)

## வெளிநாடு சென்று குடியேற அரசாங்க உத்தரவு கிடைத்தது

நாங்கள் ஆஸ்ட்ரேலியாவில் குடியேற விரும்பி, அதற்காக மனுச் செய்துகொண்டோம். நெடுநாட்களாகக் காத்திருந்து பார்த்தோம். இந்த ஆண்டுக்குள்ளாகவாவது, அந்த உத்தரவு எங்களுக்குக் கிடைக்குமாவென்றுகேட்டுச் சில நாட்களுக்கு முன் தங்களுக்கு எழுதியிருந்தேன். "பூண்டி மாதா படத்தைக் கண்ணாடிச் சட்டமிட்டு வைத்து வேண்டிவந்தால், இந்த ஆண்டிற்குள்ளாகக் குடியேற்ற உத்திரவு கிடைக்கும்." என்று பதில் எழுதினீர்கள்.

அப்படியே செய்து வேண்டிக்கொண்டு வந்தோம். இறைவனருளால், 21—8—70 அன்று, நாங்கள் பெரிதும் எதிர்பார்த்து, ஏங்கிய அந்த உத்திரவு எங்களுக்குக் கிடைத்தது. என் கணவரும் நானும் இதனால் பெரிதும் மகிழ்ந்தோம். எங்கள் நன்றிக்காணிக்கையாக ரூ. 100 மணியார்டர் அனுப்பியுள்ளேன்.

கல்கத்தா-20 — திருமதி ஓவன் டி'கோஸ்டா.

(20)

## குஷ்டம் குணமானது

சில ஆண்டுகளுக்குமுன் டாட்டா நகரிலிருந்து மாதாவின் ஆசியும் அருளும் பெற்றுப்போகத் தங்கள் ஆலயத்

திற்கு வந்திருந்தது நினைவிருக்கலாம். அப்பொழுது எனக்குக் குஷ்டநோய் கண்டிருந்தது; இப்பொழுதோ, நான் அதிலிருந்து முழுதும் குணமாகிவிட்டேன் என மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன். பின்னர் எனக்குத் திருமணமும் ஆனது. எனக்கு இப்பொழுது 3 குழந்தைகள் உள்ளனர்; நான் வேலூர், C. M. C. மருத்துவ மனையில் வேலை பார்க்கிறேன்.

காட்பாடி — கார்ல்டன் டி. பிரான்.

(21)

## மனந்திரும்புதல்—திருமண உறவு—நோயில் குணம், அடைந்தது

பூண்டிப் புதுமை மாதா எனக்கிரங்கி, நான் ஆவலோடு நாடிய அனைத்தையும் நிறைவேற்றிவிட்டாள்.

முதலாவதாக, தீய பழக்கங்களில் மூழ்கியிருந்த என் மகன் கடந்த ஒருமாத காலமாக முழுதும் மாறி, நல்லபடியாக நடந்துகொள்ளுகிறான். உரிய காலத்தில் வீட்டுக்கு வந்துவிடுகிறான். தகாத தன் நண்பர்களுடன் சேர்வதேயில்லை. அவன் தொலைந்தே போனான்; இனித் திருந்தவே மாட்டான் என்றே எண்ணிவிட்டோம். இப்பொழுதோ, அவன் திருந்தி நல்லவனாக நடப்பதைக் காண எவ்வளவோ ஆறுதலும் மகிழ்ச்சியுமாக உள்ளது. இந்தப் பெரிய உபகாரத்துக்காகப் பூண்டிப் புதுமை மாதாவுக்கு எங்கள் உளம் கனிந்த நன்றி

இரண்டாவதாக, என் மகளுக்கு ஒரு நல்ல இளைஞனுடன் திருமண ஒப்பந்தம் ஏற்பாடாகியுள்ளது. மாப்பிள்ளை, காப்பித் தோட்டம் ஒன்றுக்கு உரிமையாளர். மகளைப்பற்றிப் பெரிதும் கவலைப்பட்டுக்கொண்டிருந்த நாங்கள், இந்த உறவுபற்றிப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம். பூண்டிப் புதுமை மாதாவின் அருளால், யாவும் சிறப்பாக, திருப்திகரமாக அமைந்தது.

மூன்ருவதாக, பயங்கரமான ஒரு நோயினுல் மிகவும் அவதியுறும் எங்கள் தாயாருக்காகப் பூண்டிப் புதுமை மாதாவிடம் வேண்டிக்கொண்டோம். இப்பொழுது அவர் கள் நிலையில் ஆச்சரியமான முன்னேற்றம் கண்டுள்ளது.

பூண்டிப் புதுமை மாதா வழங்கிய எல்லா உபகாரங் களுக்கும் நன்றியறிதலாக ரூ. 200 மணியார்டர் அனுப்பி யுள்ளேன். அதில் ரூ 100 என் தாயார் உதவியதாகும்,

மங்களூர் திருமதி கிரேஸ் ராஸ்கிஞு

## (22)

## பேசும் திறனும், திருமண ஏற்பாடும்

என் இரு பெண்கள் பற்றியும் சில நாட்களுக்கு முன் தங்களுக்கு எழுதியிருந்தேன். இளையவளுக்கு வயது 6; பேச வராமல் தடுமாறிக்கொண்டிருந்தாள்; இப்பொழுதோ நிறையப் பேசுகிருள்; தனிப் பள்ளிக்கூடம் ஒன்றிற்கும் போய் வருகிருள்.

மூத்தவளுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைக்கவேண்டு மென்றும் தங்களுக்கு எழுதியிருந்தேன். 'அவளுக்கு ஒரு நல்ல வரன் கிடைப்பானென்றும், நாள்தோறும் இரு முறை மாதா செபத்தைச் சொல்லிவரவேண்டுமென்றும்' எனக்குப் பதில் எழுதியிருந்தீர்கள்.

மாதாவின் அருளால், என் மகளே ஒரு வரனைத் தேர்ந்தெடுத்திருக்கிருள்; அவர் ஓர் இந்தியர்; நெருங்கிய உறவினருமல்லர்; ஆனுல், இவளைப் பெரிதும் விரும்பி மணந்துகொள்ளக் கருதியிருக்கிருர் என்று தெரிகிறது. என் கணவரும் நானும் இந்த ஏற்பாட்டை வரவேற் கிருேம். நன்றி.

கொழும்பு, இலங்கை திருமதி டி. ஆர். பாய்வ.

(23)

## கல்விக் கடன் தொகை கிடைத்தது

பூண்டிப் புதுமை மாதாவுக்கு என் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்க வார்த்தைகளே இல்லை.

சுவாமி, நான் எம். எஸ். ஸி. இறுதி ஆண்டுப் படிப்பை முடிப்பதற்கு வழியில்லாமல் தவித்துக்கொண்டிருப்பதாகத் தங்களுக்கு எழுதினேன். நம் அன்னை மாமரியிடம் வேண்டிக்கொள்ளும்படி தாங்கள் பதில் எழுதியதைக் கண்டு அவளுடைய பாதத்தில் என்னையே ஒப்படைத்தேன்.

சிண்டிக்கேட் வங்கி நிருவாகத்தினர் கல்விக் கடன் தொகை அளிப்பதற்காகப் போட்டித் தேர்வு நடத்தினர். அதில் கலந்துகொண்ட 58 எம். எஸ். ஸி. மாணவர்களுள் நான் ஒருவனே தேர்ந்தெடுக்கப்பெற்றேன். இதன் மூலம் ரூ. 3000 எனக்குக் கல்விக் கடன்தொகையாகக் கிடைக்கும். பூண்டிப் புதுமை மாதாவின் அருள்தான் இது என்பதில் என்ன ஐயம்? இனி நான் அவளை முழுமையும் நம்பியிருப்பேன். தேர்வுகள் முடிந்ததும், நான் அங்கு வந்து நம் அன்னைக்கு என் நன்றிக் கடனைத் தெரிவிப்பேன் என்பது திண்ணம்.

சங்கனாச்சேரி

ஜ்யார்ஜ் குரியன்,
எம். எஸ். ஸி. - இறுதி ஆண்டு.

(24)

## 16 ஆண்டுகளாக இருந்த ஒருத்தலைவலி குணமானதும் திரைப்படம் ஒன்று வெற்றிபெற்றதும்

கடந்த 16 ஆண்டுகளாக ஒருத்தலைவலியால் மிகவும் அவதிப்பட்டேன். திரு. வியட்நாம் சுந்தரம் அவர்கள் பூண்டி மாதாவிடம் வேண்டிக்கொள்ளும்படியும், முடிந்தால், அத்திருத்தலத்துக்குச் சென்றுவரும்படியும் ஆலோசனை கூறினார்கள். அப்படியே, பூண்டிமாதாவிடம் வேண்டிக்கொண்டபிறகு, எனக்கு நல்ல சுகம் கண்டுளது.

மேலும், என் முதற்படமான, "காவியத்தலைவி," வெற்றிபெறுமாறும் மாதாவிடம் வேண்டிக்கொண்டேன். இந்தப் படம் இப்பொழுது தென்னிந்தியா முழுவதும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

சங். V.S. லூர்து சேவியர் சுவாமிகளையும் இத்தலத்தையும் பார்த்ததுமுதல் வாழ்க்கையையே முற்றிலும் மாறுபட்ட கோணத்திலிருந்து காணத் தோன்றுகின்றது; என் சுமைகளெல்லாம் இறங்கியதாக உணர்கிறேன்.

பூண்டி மாதாவின் ஆசியை நாடி, எப்பொழுதுமே வேண்டிக்கொண்டு வருவேன்.

சௌக்கார் ஜானகி,
சௌட்டாஃப்ரோடு, (முகாம்: பூண்டி, 6–12–'70
தேனும்பேட்டை, சென்னை காலை: 10–30 மணி)

(25)

## சிறு நீரகத்திலுள்ள கல் அற்புதமாய் வெளிவந்தது

வயிற்று வலியால் அவதியுற்ற எனக்கு ஊசி மருந்துகளும் மாத்திரைகளும் குணப்படுத்த முடியாததால் 16—5—1971 அன்று எக்ஸ்ரே (X-ray) எடுத்தார்கள். என் சிறு நீரகத்தில் ஒரு கல் இருப்பதாக (stone in the kidney) எக்ஸ்ரே போட்டோ காட்டியது. இதைக் கண்டதும் டாக்டரவர்கள் ஒரு பெரிய அறுவை சிகிச்சை மூலம்தான் என் வியாதி நீங்கும் என்றும், இதற்கு ஒரு பெரிய டாக்டரை அணுக வேண்டுமென்றும் சொன்னார்.

ஆனால், என் நம்பிக்கை முழுவதையும் பூண்டி மாதாவின் பேரில் வைத்து உருக்கமாக செபித்துக் கொண்டிருந்தேன்.

அன்று மாலை 4 மணிக்கு எனக்கு சிறுநீர் கழிக்க வேண்டிய உணர்ச்சி ஏற்பட்டது ஆனால் ஏதோ ஒரு தடங்கலினால் சிறுநீர் கழிக்க முடியவில்லை. உடனே நிறைய

தண்ணீர் குடித்தேன். அரை மணி நேரத்தில் சிறுநீர் கழிக்க முயன்றபோது, ஏதோ ஒரு பழுப்பு நிறமான பொருள் சிறுநீருடன் வெளிவந்தது. அதுதான் அந்த சிறுநீரகத்திலிருந்த கல்லோ? என் வயிற்றுவலியும் குறைந்தது. உடனே டாக்டரிடம் சென்று இதைப்பற்றி தெரிவித்தேன். அவர் முதலில் நம்ப மறுத்தார். ஆனால் வெளிவந்த பொருளைப் பார்த்ததும், இது இயற்கைக்கு மேற்பட்ட பெரிய அதிசயம் என்றும், அறுவை சிகிச்சையி லிருந்து நான் தப்பித்துக்கொண்டேன் என்றும் சொன்னார். இப்போது வயிற்றுவலி சிறிதும் இல்லை. கூடிய சீக்கிரம் பூண்டிக்கு வந்து எக்ஸ்ரே போட்டோ வையும் காட்டி மாதாவுக்கு நன்றி செலுத்துகிறேன்.

மக்ராத் ரோடு,
பெங்களூர்.

A. டிக்ருஸ்.

(26)

## ஒரே இரவில் புற்றுநோய் நீங்கியது

என் சகோதரர் புற்றுநோயால் (cancer) பீடிக்கப்பட்டு "பிழைக்கமாட்டார்" என்று மருத்துவர்கள் கைவிட்டனர் அச்சமயம் அவருக்காக வேண்டிக்கொள்ள உங்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்குத் தாங்கள் மாதா சுரூபத்தையும் செபத்தையும் அனுப்பி, என் சகோதரர்' சுரூபத்தை அணிந்து செபத்தை நம்பிக்கையுடன் சொன்னால் சுகம் பெறுவார் என்று எழுதினீர்கள். தங்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைபட்டிருக் கிறேன். ஏனெனில், தாங்கள் எழுதியதுபோல் செய்ததில் ஒரே இரவில் என் சகோதரர் புற்று நோயினின்று குணப் பட்டார். இப்போது அவர் முற்றிலும் நலம். மாதாவுக்கு எங்கள் நன்றி காணிக்கையாக ஒரு புடவை அனுப்பலாமா? அல்லது பணமாக அனுப்பலாமா? தயவுசெய்து தெரிவிக்கவும்.

3, கன்னிங்காம் ரோடு,
பெங்களூர்.

H. R. சேத்ஞ.

(27)

## மணமாகி 23 ஆண்டுகளுக்குப்பின் குழந்தைப் பேறு

எங்களுக்கு திருமணமாகி 22 ஆண்டுகளாயும் குழந்தைப் பேறில்லாமலிருந்தோம். 1969ம் ஆண்டு பூண்டிக்கு வந்து மாதாவை வேண்டினோம். 1970ம் ஆண்டு எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. 1971ம் ஆண்டு மகனோடு மறுமுறையும் பூண்டிக்கு வந்து மாதாவை சந்தித்து எங்களது நேர்ச்சிக் காணிக்கையை செலுத்தினோம். பூண்டி மாதாவை என்றும் மறவோம்.

குன்றுகுடி,
திருவனந்தபுரம்.

திரு. சிங்காரம்,
திருமதி சூசையம்மாள்.

(28)

## ஒன்பது சிலுவைகளையுடைய பூண்டி மாதா தாயத்து சீட்டு

எனக்கு மனத்துயர் அவநம்பிக்கை ஏற்படும்போது, நான் அணிந்துகொண்டிருக்கிற புனித பூண்டி மாதாவின் சிலுவைச் சீட்டு அடங்கியுள்ள பேழையை (தாயத்தை) தொட்டால், மாதா எனக்கு ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்டுகிறாள்.

இந்த சிலுவைச் சீட்டுக்கள் எனக்கு வந்து சேர்ந்த அன்றைய தினம் எனது சிநேகிதிகளில் ஒருத்தி நோய்வாய்ப்பட்டிருந்தாள். அவளுக்கு ஒரு சிலுவைச் சீட்டைக் கொடுத்து அதை அணிந்துகொள்ளச் சொன்னேன். உடனே மாதா அவள் மன்றாட்டைக் கேட்டாள். என் சிநேகிதியும் குணமடைந்தாள்.

என் மருமகள் பல்வீறு வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒரு சீட்டையும் சுரூபத்தையும் அனுப்பி, அவைகளை விசுவாசத்துடன் அணிந்து மாதாவின் பரில் நம்பிக்கைவைக்கச் சொன்னேன்.

அன்றையதினம் அவள் பல் டாக்டரிடம் சிகிச்சைக்காகப் போகவேண்டிய நாள். வலியும் அதிகம். போகிற வழியில் செபித்துக்கொண்டே போனுள். பல் டாக்டர் பார்த்ததும், பல்லீறில் உள்ள மகத்தான மாறுதலைக் கண்டு பிரமித்து திருப்தி தெரிவித்தார். வலியும் நின்று விட்டது. அன்றையிலிருந்து அவள் பூரணசுகம் பெற்ருள்.

சௌதார், மிடில்செக்ஸ் இங்கிலாந்து } ஸ்ரீமதி Q. அலெக்சாண்டர் 17, எல்லிஸ் கார்டன்,

(29)

## நொடியில் எலும்பு 2½ அங்குலம் நீண்டுவிட்டது

திருவாளர் கிரகோரி அந்தோனி ஹார்டிங் என்பவர் மலேசியா நாட்டைச் சேர்ந்தவர். தற்போது இவருக்கு வயது 28. இவர் 2½ வயது குழந்தையாய் இருந்தபோது வழுக்கி விழுந்ததால் இடுப்புல் எலும்புருக்கி நோய் ஏற்பட்டது. இடது கால் வலது காலைவிட 2½ அங்குலம் குட்டையாகிவிட்டது. எனவே நொண்டி நொண்டியே நடப்பதோடு வலியாலும் அவதிப்பட்டார்.

தமது 23ம் வயதில் தொழிலை முன்னிட்டு ஜெர்மனிக்கு சென்ருர். அங்கு மூன்று மாதம் வைத்தியம் செய்தும் எவ்வித பயனும் இல்லை.

மலேசியா திரும்பியதும் மூன்று முறை அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார். இடது காலில் 2½ அங்குலம் அதிக உயரமுள்ள காலணியுடனும் ஊன்றுகோலுடனும் கஷ்டத்தோடு நடந்துவந்தார்.

திரும்பவும், ஐரோப்பா சென்று சிகிச்சை பெற இந்தியா வழியாக பயணம் செய்தார். இந்தியாவில் இவருக்கு பூண்டித் திருத்தல வரலாறு கிடைத்தது. அதைப் படித்த பின்னர் 25—3—73 அன்று பூண்டிக்கு வந்து தங்கினர். மூன்ருவது நாள் காலையில் இவர் எழுந்ததும் ஊன்றுகோல் இல்லாமலே இவருக்கு நடக்க முடிந்தது. இடுப்பிலும் காலிலும் இருந்த வலி நீங்கி

விட்டது, குட்டையாயிருந்த இடதுகால், வலது கால் அளவுக்கு வளர்ந்துவிட்டது. ஊன்றுகோலையும் 2½ அங்குலம் அதிகமான உயரமுள்ள இடது காலணியையும் உதறி எறிந்துவிட்டு நன்ருக நடந்தார்.

இப்புதுமையான குணத்தைப் பெற்ற ஹார்டிங், பூண்டி மாதாவுக்கு நன்றிசெலுத்திச் சென்ருர். இப்போது தமது உற்ருர், உறவினர் நண்பர்களுக்கு பூண்டி மாதாவின் புதுமைக்கு உயிருள்ள சாட்சியாக விளங்குகிருர்.

(30)

## மெஸ்மெரிசத்தில் ஈடுபட்டவர் மனந்திரும்பியது

ஜுலை மாதம் நான் பூண்டிக்கு வந்து மாதாவையும் மறைந்த தந்தையின் கல்லறையையும் தரிசித்து, தங்களைக் கண்டு, என் மகன் என்னைவிட்டுப் பிரிந்து மெஸ்மரிசத்தில் ஈடுபட்டு, 2½ வருடங்களாக வீட்டுடன் எவ்வித தொடர்பும் இல்லாமலிருக்கிருன் என்று வருத்தத்துடன் சொன்னேன். தாங்கள் எனக்கு ஆறுதல் கூறி, பூண்டி மாதாவையும் மறைந்த தந்தையையும் பார்த்து வேண்டிக்கொள்ளச் சொன்னீர்கள். அதன்படி நான் வேண்டிக்கொண்டேன்.

என்ன புதுமை! நினைத்தாலே என் நெஞ்சம் பூரிப்படைகிறது. செப்டம்பர் முதல் தேதியன்று என் மகனிடமிருந்து கடிதம் வந்தது; நல்ல செய்தி. மாதா என் உயிருக்கு ஆபத்தான படுகுழியிலிருந்து காப்பாற்றிஞர்கள் என்றும், என்னை மன்னித்துவிடுங்கள் என்றும், நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து நன்மை வாங்கினேன் என்றும் என் மகன் எழுதியிருந்தான். பிறகு மகன் வந்து குடும்பத்தோடு சேர்ந்துகொண்டான் இந்த பூண்டி மாதாவின் புதுமைக்கு மறைந்த தந்தையின் செபமும், தங்கள் ஜெபமுமேதான் காரணம். விரைவில் என் மகனை பூண்டிக்கு அழைத்துவந்து நன்றியறிதல் சமர்ப்பிக்கிறேன்.

J. இரட்சகமரி, கூறைநாடு, மாயூரம், 21—9—73.

# செபங்கள்

## சிறிய நவநாள் செபங்கள்

பூலோகம் போற்றும் பூண்டிப் புதுமை மாதாவே புதுமை ஆரோக்கியத்தை எங்களுக்குப் பூரணமாய்த் தாரும், தாயே!

**ஓ மகா பரிசுத்த தமதிரித்துவமே!**

எங்கள் சிருஷ்டிப்பு, இரட்சிப்பு, போஷிப்பில் உமது நல்ல ஆசையும் கருத்தும் நம்பிக்கையும் முற்றிலும் நிறைவேற, எங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை விலக்கி, நாங்கள் ஆசிக்கும் நன்மையை அருளும்.

தினமும் காலை, மாலை: 1 பர.—1 அருள்—1 திரி

**பூலோகம் போற்றும் பூண்டி புதுமை மாதாவே!**

எங்களுக்கு ஏற்பட்ட இடைஞ்சல் விலக வேண்டும். நாங்கள் எதிர்பார்க்கும் நன்மை கிடைக்க வேண்டும். எங்கள் குடும்பம் விளங்க வேண்டும். இதனால் பூமியில் உமது மகிமை விளங்கவேண்டும்.

தினமும் காலை, மாலை: 3 அருள்—1 திரி.

வசதியைப் பொறுத்து, இதே கருத்திற்காக தினசரி திவ்ய பூசை காணுதல், திவ்ய நன்மை வாங்குதல்.

## பெரிய நவநாள் செபம்

**பூண்டிப் புதுமை மாதாவைப் பார்த்து மன்றாட்டு**

நித்திய பிதாவே! உமது பிரிய குமாரத்தியும், மனுக்குல இரட்சகரே! உமது நேச தாயும், சகலத்தையும் பரிபாலிக்கும் திவ்விய இஸ்பிரித்து சாந்துவே! உமக்கு உகந்த பத்தினியுமாகிய புனித கன்னி மரியம்மாளை நித்தியத்திலிருந்து நியமிக்கப்பட்டபடி, குறிப்பிட்ட காலத்தில், விசேஷ விதமாய் மகிமைப்படுத்தத் தீர்மானித்தீரே, உமக்கே ஆராதனை.

திரியேக தேவனே! உமது நியமப்படி, இப்பூமியில் ஒரு பகுதியாகிய, இந்தியாவில், தமிழ் நாட்டில், தஞ்சை

மாவட்டத்தில், திருக்காட்டுப்பள்ளியினருகில் உள்ள பூண்டி என்னும் குக்கிராமத்தில் உமது விசேஷ அருள் மாரியால் அவ்வன்னை மூலமாய் மக்களுக்கு ஏராளமான நன்மைகளை வாரி இறைத்து வருகிறீரே, உமக்கே ஸ்துதியும் ஸ்தோத்திரமும்.

பூண்டியில் எழுந்தருளியிருக்கும் புதுமை மாதாவே, இயற்கைச் சக்திக்கும் மனித வல்லமைக்கும் மேலான, உலக மக்களின் இக்கட்டு இடைஞ்சல்களைப் போக்கி அவர்கள் ஆசிக்கும் நன்மைகளை அபரிமிதமாய் அளிக்கும் உமது அன்பும் அனுக்கிரகமும், இப்பரந்த பாரத நாட்டில் மட்டுமேயன்றி, உலகத்தின் எல்லா பாகங்களிலும் பரவி இருக்கிறதைப் பற்றி, அதி உன்னத தேவனுக்கு அநவரத காலமும் ஸ்துதியும் ஸ்தோத்திரமும் உண்டாவதாக.

இது சமயம் என் ஆத்துமத்திற்கும், சரீரத்திற்கும் அந்தஸ்திற்கும், ஏற்பட்ட கஷ்டத்தைப் போக்கவும், ஆசிக்கும் நன்மைகளை அடையவும் எப்பக்கமும் ஓடியாடி எவ்விதப் பயனுமின்றி, கடைசியாக, பூண்டிப் புதுமை மாதாவே! நீரே தஞ்சமென்று உம்மைத்தேடி அடைந்து, உமது பாதத்தில் விழுந்து கிடக்கின்றேன். உமது வல்லமையுள்ள மன்றாட்டால் உமது அன்பு, அனுதாபம், நீதி, நியாயம் அனுசரணைகளை எனக்கு அளித்தருளும் என் ஆத்துமத்திற்கும் சரீரத்திற்கும் அந்தஸ்திற்கும் ஏற்பட்ட கஷ்டங்கள் முற்றிலும் விலகவும், எனக்குத் தேவையான நன்மைகளை நான் அடையவும், திரியேக சர்வேசுரன் சித்தப்படிக்கு எனக்கு வரம் அருளும் தாயே.

கடந்த காலக் குற்றங்களுக்கு மனஸ்தாபக் கண்ணீரோடு தக்க பரிகாரம் செய்யத் தீர்மானித்திருக்கிறேன். மீதியாயுள்ள என் வாழ்நாளை, கடவுளின் மகிமைக்காகவும், என்னுடையவும், பிறருடையவும் நன்மைக்காகவும் செலவழித்தபின், இறுதியில் சமாதானத்தில் கண்ணை மூடி, உம்முடன் சர்வேசுரனுடைய பேரின்ப பாக்கியத்தில் பங்குபெற, வரம் அடைந்துதாரும் தாயே. ஆமென். 3 அருள்—1 திரி,

# பூண்டிப் புதுமை மாதா பிரார்த்தனை

சுவாமி, கிருபையாயிரும்
கிறிஸ்துவே, கிருபையாயிரும்
சுவாமி, கிருபையாயிரும்
கிறிஸ்துவே, எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
கிறிஸ்துவே, எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,
எங்களைத் தயைபண்ணி இரட்சியும், சுவாமி.

உலகத்தை மீட்டு இரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,
எங்களைத் தயைபண்ணி இரட்சியும், சுவாமி.

பரிசுத்த ஆவியான சர்வேசுரா,
எங்களைத் தயைபண்ணி இரட்சியும், சுவாமி.

பரிசுத்த தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,
எங்களைத் தயைபண்ணி இரட்சியும் சுவாமி.

அர்ச். மரியாயே,
சர்வேசுரனுடைய மாதாவே,
கிறிஸ்துவினுடைய பரிசுத்த மாதாவே,
பூலோகம் போற்றும் பூண்டிப் புதுமை மாதாவே,
புதுமையால் பிரகாசித்து வரும் பூண்டிப் புதுமை மாதாவே,
அண்டி வந்தவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் பூண்டிப் புதுமை மாதாவே,
கேட்கும் வரத்தைத் தட்டாமல் கொடுக்கும் பூண்டிப் புதுமை மாதாவே,
உம்மைத்தேடி வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கும் பூண்டிப் புதுமை மாதாவே,
துன்பம் விலக ஆசிக்கும் பூண்டிப் புதுமை மாதாவே,
துயரப்படுவோருக்குத் தேற்றரவாய் இருக்கும் பூண்டிப் புதுமை மாதாவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

எதிர்பார்க்கும் நன்மைகளைப் பெறச் செய்யும்
பூண்டிப் புதுமை மாதாவே,
குடும்பம் விளங்க ஆசிக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
குடும்பம் ஒருமையாயிருக்க ஆசிக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
குடும்பத்தில் சமாதானத்தை நிறுவும்
பூண்டிப் புதுமை மாதாவே,
வியாதியஸ்தர்களுக்கு நல்ல ஆரோக்கியத்தை
அளிக்கும் பூண்டிப் புதுமை மாதாவே,
ஊமையைப் பேசவைக்கும் பூண்டிப்புதுமைமாதாவே,
புற்று நோயைக் குணப்படுத்தும்
பூண்டிப் புதுமை மாதாவே,
இருதய நோயைக் குணப்படுத்தும்
பூண்டிப் புதுமை மாதாவே
சித்த பேதத்தைக் குணப்படுத்தும்
பூண்டிப் புதுமை மாதாவே,
தீராத வியாதிகளைத் தீர்த்து வைக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
பார்வை இழந்தவர்களுக்குப் பார்வையளிக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
பைத்தியத்தைக் குணப்படுத்தும்
பூண்டிப் புதுமை மாதாவே,
வழங்காத கைகால்களை வழங்கச் செய்யும்
பூண்டிப் புதுமை மாதாவே,
கிடைக்காத பொருளைக் கிடைக்கச் செய்யும்
பூண்டிப் புதுமை மாதாவே,
காணாத பொருளைக் கண்டடையச் செய்யும்
பூண்டிப் புதுமை மாதாவே,
பதவி உயர்வு கிடைக்கச் செய்யும்
பூண்டிப் புதுமை மாதாவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மகப்பேறு இல்லாதவர்களுக்கு மக்கள் வரமளிக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
நம்பியவர்களுக்கு நல்ல உபகாரியாய் இருக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
சிறு பிள்ளைகளுக்கு ஞான விளக்காய் பிரகாசிக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
கற்புக்குக் களங்கம் வராமல் காத்திடும்
பூண்டிப் புதுமை மாதாவே,
பாவத்திலிருந்து விலக்கிக் காக்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,
துஷ்டர்களை மனந்திருப்பும் பூண்டி புதுமை மாதாவே,
துன்மார்க்கரை நல்வழிப்படுத்தும்
பூண்டிப் புதுமை மாதாவே,
பேய் பிசாசுகளை நடுநடுங்கச் செய்யும்
பூண்டிப் புதுமை மாதாவே,
பாவிகளை மனந்திருப்பும் பூண்டிப் புதுமை மாதாவே,
அமலோற்பவம் எனும் நாமம் பூண்ட
பூண்டிப் புதுமை மாதாவே,
ஜென்ம இராக்கினியாய் விளங்கும்
பூண்டிப் புதுமை மாதாவே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,

— எங்கள் பாவங்களைப் போக்கியருளும், சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,

— எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும், சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்கும் சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே.

— எங்களைத் தயைசெய்து இரட்சியும் சுவாமி.

பூலோகம் போற்றும் பூண்டிப் புதுமை மாதாவே! ஆதாம் ஏவாள் பாவத்தால் சாபத்தை அடைந்து உலகில் பிறக்கும் மனிதன் இறக்குமட்டும் கஷ்டப்பட்டே தீர வேண்டும் என்கிற உண்மை எல்லோரையும்விட உமக்குப் பகல் வெளிச்சமாதலின் சாதிமத பேதமின்றித் துன்புறு வோரையெல்லாம், வாருங்கள் என்று அழைத்து அவர்களது துன்பத்தை அகற்றி, இன்பத்தை ஊட்டிவரும் உமது அன்பே அன்பு! அநுதாபமே, அநுதாபம்! இந்தப் பாக்கியத்தை எல்லோரும் அடைய, தேவ சந்நிதானத்தில் மன்ருடி மனுப்பேசி அதற்கான அருளையும் ஒளியையும் அடைந்து தாரும், தாயே.

சேசுகிறிஸ்துநாதருடைய திரு வாக்குத்தத்தங்களுக்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத்தக்கதாக.

பூண்டிப் புதுமை மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

### செபிப்போமாக

நித்திய பிதாவே, உமது பிரிய குமாரத்தியும், மனுக்குல இரட்சகரே, உமது நேசத்தாயும், சகலத்தையும் பரிபாலிக்கும் பரிசுத்த ஆவியானவரே, உமக்கு உகந்த பத்தினியுமாகிற புனித கன்னிமரியம்மாளை உமது விசேஷ அருள் மாரியால் எங்களுக்கு அளித்து, அவ்வன்னையின் மூலமாய் எங்களுக்கு ஏராளமான நன்மைகளை வாரி இறைத்து வருகிறீரே, அந்த அன்னையின் உத்தம மன்ருட்டுக்களையெல்லாம், எங்கள் ஆண்டவராகிய சேசுகிறிஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும், ஆமென்.

### இரக்கத்தின் தாயைப் பார்த்து மன்ருட்டு

மிகவும் இரக்கமுள்ள தாயே, இதோ உமது அடைக்கலமாக ஓடிவந்து உம்முடைய உபகார சகாயங்களை இரந்து மன்ருடிக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப் பட்டதாக ஒருபோதும் உலகத்தில் சொல்லக் கேள்விப்

பட்டதில்லை என்று நினைத்தருளும், கன்னியருடைய இராக்கினியான கன்னிகையே, தயவுள்ள தாயே, இப்படிப்பட்ட நம்பிக்கையால் ஏவப்பட்டு உமது திருப்பாதத்தை அண்டி வருகிறேன். பெருமூச்செறிந்தழுது பாவியாகிய நான் உமது தயாளத்துக்குக்காத்துக்கொண்டு உமதுசமூகத்தில் நிற்கிறேன். அவதரித்த வார்த்தையின் தாயே, என் மன்றாட்டைப் புறக்கணியாமல் தயாபரியாய்க் கேட்டுத் தந்தருளும்.—ஆமென்.

### நல்ல மரணமடைவதற்குப் புனித சூசையப்பரைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிற ஜெபம்

தேவ வரங்களால் நிறைந்த புனித சூசையப்பரே வாழ்க! கர்த்தரும் கர்த்தருடைய திருத்தாயாரும் உம்முடனே. மனிதர்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே. உம்முடைய திருக்கன்னிப் பத்தினியினுடைய திரு உதிரத்தின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவரே!

கன்னித்தாயாருடைய பரிசுத்த பத்தாவாகிய புனித சூசையப்பரே! உம்முடைய ஊழியரும் பிள்ளைகளுமா யிருக்கிற எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

சேசு கிறிஸ்துநாதருடையவும் கன்னிமரியம்மாளுடையவும் திருக்கரங்களில் பாக்கியமான மரணத்தை அடைந்தவர் நீரே. எங்களுக்காக எப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும், ஆமென்.

### எவ்வகை விபத்திலும் திருக்குடும்பத்தைப் பார்த்துச் செபிக்கும் மன்றாட்டு

எங்கள் தந்தையாகிய சூசையப்பரே, உமது நேசத் திருக்குமாரனின் விலைமதிக்கப்படாத திருச்சரீரம் சிலுவையினின்று இறக்கப்பட்டதைப் பார்த்து—இடி, மின்னல், பெருங்காற்று, மழை, பெருத்தவெள்ளம், கொடிய இருள், கொடிய பஞ்சம், கொள்ளைநோய், கொடும்பிணி, கோர யுத்தத்தினின்று மனுக்குலத்தை ஆதரியும், தந்தையே, ஆதரியும், ஆதரியும். ஒரு பர. ஒரு அருள். ஒரு திரி

எங்கள் தாயாகிய மரியாயே, உமது நேசத் திருக்குமாரனின் விலைமதிக்கப்படாத திருச்சரீரம் சிலுவையினின்று இறக்கப்பட்டதைப் பார்த்து—இடி, மின்னல், பெருங்காற்று, மழை, பெருத்தவெள்ளம், கொடிய இருள், கொடிய பஞ்சம், கொள்ளைநோய், கொடும்பிணி, கோர யுத்தத்தினின்று மனுக்குலத்தை அரவணையும், தாயே, அரவணையும், அரவணையும். 3 அருள்—ஒரு திரி.

எங்கள் சகோதரராகிய சேசுவே, உமது விலைமதிக்கப்படாத திருச்சரீரம் சிலுவையினின்று இறக்கப்பட்டதைப் பார்த்து—இடி, மின்னல், பெருங்காற்று, மழை, பெருத்த வெள்ளம், கொடிய இருள், கொடிய பஞ்சம், கொள்ளை நோய், கொடும்பிணி, கோர யுத்தத்தினின்று மனுக்குலத்தை இரட்சியும், சகோதரரே, இரட்சியும், இரட்சியும்.

ஒரு பர. ஒரு அருள். ஒரு திரி.

## திவ்விய நற்கருணை வாங்கினபின், பாடுபட்ட சுரூபம் அல்லது படத்திற்குமுன் சொல்லத்தக்க பரிபூரண பலனுள்ள ஜெபம்

மகா மதுரம் பொருந்திய நல்லசேசுவே! தேவரீருடைய திருச்சமுகத்தில் அடியேன் முழந்தாளிலிருந்து, சாஷ்டாங்கமாக விழுந்து, "என் கைகளையும் கால்களையும் துளைத்தார்கள்" என் எலும்பெல்லாம் எண்ணினார்கள்" என்று தேவரீரைப்பற்றி, முன்னர் தாவீதென்கிற தீர்க்கதரிசி உமது திருவாயின் வாக்கியமாக வசனித்ததை என் கண்முன்பாகக் கண்டு தேவரீருடைய ஐந்து திருக்காயங்களையும் மிகுந்த மன உருக்கத்தோடும் துக்கத்தோடும் என்னுள்ளத்தில் விசாரித்து. நினைவில் தியானிக்கிற இந்நேரத்தில், திடனுன விசுவாசம், நம்பிக்கை தேவசிநேகம் என்கிற சுகிர்த கருத்துக்களையும், என் அக்கிரமங்களின் மேல்மெய்யான மனஸ்தாபத்தையும், அவைகளைத் திருத்த மெத்த உறுதியான பிரதிக்கினையையும் என்னிருதயத்தில் பதியச் செய்தருளவேணுமென்று, என் நல்ல சேசுவே,

தேவரீரை என் ஆத்துமத்தின் மேலான ஆசை ஆவலோடு இரந்து மன்றாடிப் பிரார்த்திக்கிறேன்.—ஆமென்.

என் தேவனாகிய ஆண்டவரே, எவ்வகையான மரணத்தை எனக்கு அனுப்ப உமக்குச் சித்தமோ, அம் மரணத்தையும் அதைச்சேர்ந்த சகல துக்க துயரம் வேதனை நோக்காடுகளோடுகூட, இதோ இக்ஷணமே, உமது கரத்திலிருந்து சமாதான அமரிக்கையோடும் முழு மனச் சம்மதத்தோடும் ஏற்றுக்கொள்ளுகிறேன்.-ஆமென்.

---

## பூண்டி மாதா பாடல்

---

**பல்லவி**

மாமரி அமலி அன்னையே
தாபரி என்றுமே எம்மையே—பூண்டி—மாமரி.

**அநுபல்லவி**

நாமம தைநிதம் வாழ்த்துவோம்
சேமம்பெ றச்சிரம் தாழ்த்துவோம்-புதுமை-மாமரி

**சரணம்**

1. ஆறுதல் அளிக்கும் அன்னை நீ
அரவ ணைத்திடும் தாயும் நீ
தேறுதல் சொல்லியே தேற்றுவாய்
தீமைகள் யாவையும் மாற்றுவாய்-புதுமை-மாமரி

2. வந்ததொல் லைகளை நீக்குவாய்
வாடிநா டுபவை ஆக்குவாய்
சொந்தஎம் குடும்பம் துலங்கவே
தாயஉன் மகிமை இலங்கவே—புதுமை—மாமரி

3. வானுல கரசி நீயன்றோ
வல்லப ரனும்உன் சேயன்றோ
ஏனோஎம் மீதின்னும் கோபமோ
ஈனர்யாம் என்பதால் தாபமோ-புதுமை-மாமரி.

4. வீரமா முனிவர் தேர்ந்திட
வேதபோ தகரும் நேர்ந்திடப்
பார்புகழ் இத்தலம் சேர்ந்திடப்
பரமன் அருட்செயல் ஓர்ந்திடப்—புதுமை—மாமரி

—வெ. மி. சம்மனசு.

### பல்லவி

இராகம் : 29-ஆவது மேளம் தாளம் : ஆதி

க க ப க ரி ஸ பா ம தா
மா மரி அ ம லி அன் னை யே
நி நி ஸ் நி த ப பா க ரி ஸ ரி
தா பரி என் றுமே எம் மை யே—பூண்டி

### அநுபல்லவி

ஸ் ஸ் ஸ் ஸ் ஸ் நி நீ ஸ் தா
நா ம ம தை நிதம் வாழ்த்து வோம்
நி நி ஸ் நி த ப பா க ரி ஸ ரி
சேமம் பெ றச் சிரம் தாழ்த்து வோம்—புதுமை

### சரணம்

பல்லவி, அநுபல்லவியைப் போல்.

தூய வளனர் அச்சகம், குடந்தை. போன் : 987